செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

விசேஷ பதிப்பு

இல. 779 | 1969 ஜூலை 25 வெள்ளிக் கிழமை | ★ ★ ★ | விலை சதம் 5

University ... Lanka
Periodicals Division
Library

## ஹோர்னட் கப்பலில் அமோக வரவேற்பு

# சந்திரனில் நடந்த நீல் பூமியில் நடந்துவந்தார்!

ஹோர்னட், (பசுபிக்) ஜூலை 24

**சந்திரனை வெற்றி கொண்டு அதன் மண்ணில் நடந்து தனது பாதத்தைப் பதித்த முதலாவது மனிதனை விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங் இன்று சந்திர மண்டல பிரயாணத்தின் பின்னர் முதல் தடவையாக பூமியில் நடந்தார்.**

அப்பலோ – 11ன் பணியை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பிய மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்களுக்கும் ஹோர்னட் கப்பலில் அமெரிக்க ஜனாதிபதியாலும் விஞ்ஞானிகளாலும் அதிகாரிகளாலும் பிரமாண்டமானதும் குதூகலமானதுமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

"அப்பலோ – 11" விண்வெளிக் கப்பல் திட்டமிட்டபடி இரவு இலங்கை நேரப்படி 10-21 இல் வந்து குதித்தது. இறுதி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டுக்கிணங்க திட்டமிட்ட இடத்திலிருந்து 287 மைலுக்குப் பால் கலம் வந்திறங்கியபோது வீரர்களை மீட்பதற்குக் ஹெலிகோப்டர் ஒன்று விரைந்து சென்றது.

அப்பலோ விண்வெளிக் கப்பலை இறக்குவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட பகுதியில் பெரும் மழையும் பலத்த காற்றும் வீசியதைத் தொடர்ந்து நிபுணர்கள் மற்றொரு இடத்தைத் தெரிவு செய்ய வேண்டியதாயிற்று.

விண்வெளிக் கப்பல் பூமியில் இருந்து 24 ஆயிரம் அடி உயரத்தில் வந்தபோது அதன் பரசூட்டுகள் தானாக விரிந்து கொண்டன. பயண ஆரம்பத்தில் மணித்தியாலம் 22 ஆயிரம் மைல் வேகத்தில் வந்து கொண்டிருந்த வான்கலத்தின் வேகம் மணித்தியாலம் 22 மைலாகக் குறைந்தது. வான்கலத்தின் பாரசூட் விரிக்கப்பட்ட பின்னரும் நீல் ஆம்ஸ்ட்ராங் ஹவுஸ்டனில் உள்ள கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன் அவசரமாகக் கதைத்தார்.

இலங்கை நேரப்படி இரவு 7-07 மணிக்கு விண்வெளி வீரர்கள் வான்கலத்தின் யந்திரத்தை மற்றொரு தடவை பரிசோதித்துப் பார்த்துக் கொண்டனர். இறுதி ராக்கெட் தீர்க்கப்பட்டு கலத்தின் வேகம் அதிகரிக்கப்பட்டது. 9-50 மணிக்கு சேவைக் கலத்திலிருந்து கட்டளைக் கலம் பிரிந்த பின்னர் 10-07 மணிக்கு கட்டளைக் கலம் வளி மண்டலத்தைப் பிளந்து கொண்டு பூமியின் ஈர்ப்புச் சக்திக்குள் பிரவேசித்தது. அப்பொழுது விநாடிக்கு 6000 அடி வேகத்தில் கலம் வந்து கொண்டிருந்தது.

வான்கலம் வந்து குதிக்க வேண்டிய இடம் சுமார் 10 மணித்தியாலங்களுக்கு முன்னர் மாற்றப்பட்டதால் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் சிறிது பரபரப்பு அடைந்த நிலையில் இருந்தனர். பல முறை விண்வெளி வீரர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் பாதை சரியானதா என்று கேட்கப்பட்டது. "நாம் சரியான பாதையில்தான் வந்து கொண்டிருக்கிறோம்" என்று ஆம்ஸ்ட்ராங் பதில் அளித்துக் கொண்டிருந்தார்.

10-10 மணி அளவில் பசிபிக் சமுத்திரத்துக்கு மேலே ஒளிப் பிழம்பு ஒன்று முதன் முதலாகக் கண்ணுக்குத் தென்பட்டது. அதற்கு பின்னே நீண்ட நெருப்புச் சுவாலைகள் நீளுவது நன்றாகத் தெரிந்தன. 24 ஆயிரம் அடி உயரத்தில் அது வந்தவுடன் அதன் பரசூட்டுகள் தானாக விரிந்து கொண்டன. எட்டுத் தினங்களுக்கு முன்னர் பூமியிலிருந்து புறப்பட்டபோது 3100 தொன் நிறையாக இருந்த அப்பலோ கப்பல் பசிபிக்கில் வந்து குதித்தபோது 180 தொன்னாக இருந்தது. (5)

## விசேஷ உடைகள் அணிந்து வெளியில் வந்தனர் வீரர்

ஹவாய் தீவிலிருந்து சுமார் 100 மைலுக்கு அப்பால் பசுபிக் கடலில் விண்வெளி வீரர்களைத் தாங்கிவந்த கட்டளைக்கலம் விழுந்தது. கட்டளைக்கலம் பசுபிக் கடலில் விழ முன்னர் தெரிவு செய்யப்பட்டிருந்த இடத்தில் விண்வெளி வீரர்கள் பூமியை வந்தடைந்த போது இடி முழக்கத்துடன் மழை பெய்து கொண்டிருந்தது.

கட்டளைக்கலம் கடலில் விழுந்ததை அடுத்து புதிய கிருமிகள் எதுவும் பூமிக்கு வந்து சேர்வதை

(4-ம் பக்கம் பார்க்க)

## சந்திரனின் இரகசியங்கள் விரைவில் வெளியாகும்

ஹவுஸ்டன், ஜூலை 24

சந்திரனில் இறங்கிய அமெரிக்க விண்வெளி வீரர்கள் இருவரினால் சந்திரனின் மேற்பரப்பில் வைக்கப்பட்ட விஞ்ஞானக் கருவியொன்று மூலம் சந்திரன் பற்றி இதுவரை அறியப்படாத அனேக இரகசியங்களை அறியமுடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அக் கருவி சந்திரனின் மேற்பரப்பில் வைக்கப்பட்ட பின்னர் சந்திரனில் இருந்த விண்வெளி வீரர்கள் செய்த வேலைகள் பற்றி ஹவுஸ்டன் விண்வெளி ஆராய்ச்சி மத்திய நிலையம் அறிய முடிந்தது.

விண்வெளி வீரர்கள் சந்திரனின் மேற்பரப்பில் சுத்தியலால் கற்களில் அடித்த ஒலி இந்த கருவி மூலம் பதிவு செய்யப்பட்டு பூமிக்கு அனுப்பப்பட்டிருப்பதாக ஹவுஸ்டன் நிலையம் அறிவித்தது. (ர)

## மீனாட்சி



இந்திரா காந்தியைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?

அப்பன் மவள் சிங்கிதான்!



வயலினும் கையுமாக வீடு திரும்பி வருகிறாள் நங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு முறை சித்தப்பா! கடிதத்தில் அன்பே!!

# பாட்டி இல்லாத சமயம் அறைக்குள் வந்தார்

## தாபரிப்பு வழக்கில் மனுதாரப் பெண் கூறினர்

"எதிர் மனுதார் உறவு முறையில் என் சித்தப்பா. ஆனுல் அவர் எனக்கு எழுதிய காதல் கடிதங்களில் அன்பே என்று எழுதியிருந்தார் அவர் என்னை விவாகம் செய்துகொள்ளுவதாக உறுதி அளித்ததால் அவருடன் உடலுறவு வைத்துக் கொண்டேன். ஆனுல் அவர் என்னை நட்டாற்றில் விட்டுச் செல்வார் என்பதை நான் கனவிலும் எண்ணவில்லை. அவர் எழுதிய காதல் கடிதங்களை அவரின் வேண்டுகோளின்படியே கிழித்தெறிந்து விட்டேன்

பன்விலை சர்க்கியூட் நீதிமன்றத்தில் கண்டி மேலதிக நீதவான் திரு. விமல் விக்கிரமசூரிய முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட பிரேமசந்திர யசவதி தாபரிப்பு வழக்கில் ஒரு சுவையான கட்டம்தான் மேலே குறிப்பிட்டுள்ள பகுதியாகும்.

இவ் வழக்கில் உடகம என்ற இடத்தைச் சேர்ந்த யசவதி மனுதாரப் பெண். கண்டி இ. போ. ச. பஸ் கண்டக்டர் பிரேமசந்திர எதிர்மனுதார். எதிர் மனுதார் மனுதாரப் பெண்ணை ஆசைநாயகியாக வைத்திருந்த போது பிறந்த குழந்தைக்கு பராமரிப்புப் பணம் கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

மனுதாரப் பெண் சாட்சியமளித்ததாவது.— எனக்கும் எதிர் மனுதாருக்கும் இடையில் இருந்த தொடர்பை எனது தங்கையும், என் சினேகிதி சோமாவதியும், லீலாவதியும் அறிந்திருந்தார்கள்.

வழக்கறிஞர்:— இந்திராவதிக்கு உங்கள் உறவைப்பற்றி என்ன தெரியும்?

மனுதாரப் பெண்:— நானும் எதிர் மனுதாரும் பாட்டி வீட்டில் ஒரு அறைக்குள் தனிமையாக இருந்ததை கண்டுள்ளார். அன்று பகல் ஒருவரும் வீட்டில் இல்லை. முன்பு திட்டமிட்டிருந்தபடி எதிர் மனுதார் அங்கு பகல் ஒரு மணியளவில் வந்தார். பிறகு இருவரும் ஒன்ருக இருந்தோம். பிறகு கட்டிலில் அருகருகே உட்கார்ந்து கதைத்துக் கொண்டிருந்தோம். அச்சமயம் தங்கை குசினிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

நீதவான்:— எதிர் மனுதார் அங்கு வந்தபோது அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளில் ஒருவரும் இல்லையா. சின்னப்பிள்ளைகள் கூடவா இல்லை.

மனுதாரப் பெண்:— பாட்டி ஒரு பயணம் போயிருந்தார். சின்னம்மா மருந்தெடுக்க போயிருந்தார். சித்தப்பா வேலைக்கு போய் இருந்தார். சின்னம்மாவின் கைக் குழந்தையை என்னைப் பார்த்துக் கொள்ளும்படி விட்டுச் சென்றிருந்தார்.

வழக்கறிஞர்:— நீர் அவருடன் ஒன்ருக இருக்கும்போது கதவு தாழ்ப்பாள் போடப்பட்டிருக்க வில்லையா?

மனுதாரப் பெண்:- முன் கதவை மூடி தாழ்ப்பாள் போட்டேன். குசினிக் கதவுக்கு தாழ்ப்பாள் போட வில்லை.

வழக்கறிஞர்:— தங்கை உங்கள் இருவரையும் கண்டபிறகு ஒன்றும் சொல்லவில்லையா?

மனுதாரப் பெண்:— அவள் புத்தகத்தை வைத்துவிட்டு போகும் போது எதிர்மனுதார் அவளைக் கூப்பிட்டு நாங்கள் இருவரும் ஒன்ருக இருந்ததை ஒருவரிடமும் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

மனுதாரப் பெண் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: அவர் படம் பார்க்க வரும்படி எழுதிய கடிதங்களில் வேறு சங்கதிகளையும் எழுதியிருந்தார். குழந்தை பிறந்தபிறகு ஆறு மாதங்கள்வரை பணம் கொடுத்து வந்திருக்கிறார். மேலதிக விசாரணை ஜூலை மாதம் 26-ம் திகதிக்கு தவணை போடப்பட்டது. (19)

## கார் மோதி மரணம்

மன்னர், ஜூலை 24

மதவாச்சி - மன்னர் வீதியில் வைத்து காரால் மோதுண்டதாகக் கூறப்படும் மன்னரைச் சேர்ந்த பி. கே. எமிஸ் (75) என்பவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானர். (5)

## தமிழ்த்தினம்

அனுராதபுரம், ஜூலை 24

இம்மாதம் 26-ந் திகதி அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயக் கட்டிடத்தில் தமிழ்த் தினம் கொண்டாட இருப்பதாக வட மத்திய மாகாண கல்வி அதிகாரி ஜனப் இஸட். ஏ. ரஹீம் கூறியுள்ளார். (24)

## கட்டிய கணவன் இருக்க கள்ளக் காதலனுக்கு கடிதம்

மாத்தளை ஜூலை 24

"அன்பே நம் இதயங்கள் இரண்டும் ஒன்றே. இவ்வளவு காலமும் பொறுத்த உங்களுக்கு இன்னும் கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்ள முடியாதா? நாம் இருவரும் சொல்ல வேண்டியவைகளை கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுவோம். ஆனுல் நீங்கள் எந்த நாளும் உங்கள் முகத்தை எனக்கு காட்டாமல் இருந்துவிடாதீர்கள். கூலிக்கு வீடொன்று எடுக்கச் சொல்லுகிறேன். அப்போதுதான் எமக்கு இலகுவாக இருக்கும். நான் உங்களுக்கு சொன்ன வேலையை செய்து முடியுங்கள். உங்களைப் போல் எனக்கும் உங்களுடன் கதைத்துக் கொண்டிருக்கவே ஆசை. இருந்தாலும் இறைச்சி சாப்பிடும் போது தொண்டையை இறுக்கிக் கொண்டு சாப்பிடுவதில்லையே. நான் எனது கணவரை அதிகம் கவனிப்பதில்லை. அவரை இப்போது காட்ட முடியாத நிலையில் இருக்கிறேன். குழந்தைகளுக்காக பொறுக்கிறேன். நான் இன்றும் என்றும், எத்தனை பிறவி எடுத்தாலும் உங்கள் மீது வைத்துள்ள அன்பு ஒரு அணுவளவும் குறையாது. நான் உங்களையே நினைத்து நினைத்து ஏக்கம் கொள்ளவா பிறந்தேன்? என்னை நம்புங்கள்.

மாத்தளை நீதவான் திரு. சிவ செல்லையா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட விவாகரத்து வழக்கில் மனுதாரப் பெண் தனது கள்ளக் காதலனுக்கு எழுதியதாகச் சொல்லப்படும் கடிதம் நீதவான் முன்னிலையில் வாசித்துக் காட்டப் பட்டது. அக்கடிதத்தின் ஒரு பகுதியே மேலே இடம் பெற்றுள்ளது.

மாத்தளை வேரகமையைச் சேர்ந்த 28 வயது நிரம்பிய அழகிய ஆசிரியை மாத்தளை திருகோணமலை வீதியைச்சேர்ந்த கருணைதாஸ என்பவரிடமிருந்து விவாகரத்துக்கு அனுமதி கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளார்

வழக்கு விசாரணையின் போது எதிர் மனுதார் மனுதாரப் பெண் சிரிபால என்பவருடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டி குறிப்பிட்ட கடிதத்தை நீதவான் முன்னிலையில் சமர்ப்பித்தார்.

முடிவில் விவாகரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது. குழந்தைகள் இரண்டின் பாதுகாப்பு உரிமைக்கு வேருெரு வழக்குத் தாக்கல் செய்யும்படி நீதவான் குறிப்பிட்டார். (19)

## சேனைக்கு தீ வைத்த பின்னர் அதற்கு தானே பலியானர்

மிஹிந்தலை ஜூலை 24

சேனைக்கு வைத்த தீயில் ஓவர்சியர் வெந்து அபாயகரமான தீக் காயங்களுடன் மரணமடைந்தார். அவரது மரண விசாரணை கனதர கோரளை மரண விசாரணை அதிகாரி திரு. ரத்நாயக்க முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வாறு அகால மரணத்தைத் தழுவியவர் காணி அபிவிருத்திப் பகுதியைச் சேர்ந்த ஓவர்சியர் முனியாண்டி வெல்லசாமி என்பவராவர்.

பலத்த எரி காயங்களுடன் பதவியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரணமடைந்தார். மரண விசாரணையின் போது கீழ்க் கண்ட சம்பவம் வெளியானது.

காணிப் பகுதிக்கு சொந்தமான இருநூறு ஏக்கர் சேனையில் தீ வைத்தனராம். தீ நன்ருக பிடித்திருக்கிறதா என்பதை அறிய நெருப்பு பற்ருத பகுதிக்கு ஓரமாக சென்று கொண்டிருந்த போது திடீரென புயல் காற்று வீசி நெருப்பு ஜுவாலை ஐம்பது அடி உயரத்தில் அலைபோல் வந்து அவரை மூடியதாம்.

நெருப்புடன் மரணப் போராட்டம் நடத்தி மயக்கமுற்ற நிலையில் நிலத்தில் விழுந்து கிடந்த போது பிரேமதாச, மெனிக்கா என்ற இருவரும் அவரைக் கண்டுள்ளனர்.

பிரேமதாச மரண விசாரணையின் போது சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:- நான் வீட்டிலிருக்கும் போது "புது அம்மோ" என்ற அலறல் கேட்டு தானும் மெனிக்காவும் அத்திசையில் ஓடினோம். பிறகு சம்பவத்தை அவர் என்னிடம் கூறினர். பதவியா காணிப் பகுதிக்கு அறிவித்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். தீ விபத்தினுல் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (19)

## காட்டில் விறகு பொறுக்க போனவர்கள் பட்டபாடு

திருகோணமலை, ஜூலை. 24

காட்டில் விறகு பொறுக்கச் சென்ற குடியேற்றவாசிகள் சிலரை கடற்படை வீரர்கள் சிலர் அடித்துத் துன்புறுத்தியதுடன் இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக் மேலாக கடற்படை முகாமில் தடுத்து வைத்து இருந்தனராம்.

இச்சம்பவம் திருகோணமலையில் இருந்து பதின்மூன்று மைல் தூரத்தில் உள்ள கல்முட்டியாங்குளப் பகுதியில் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முட்டியாங்குள நீர்த்தேக்கம் கடற்படையினரின் பொறுப்பில் இருக்கின்றது. அப்பிரதேசத்தில் விறகு பொறுக்க பாலம்பட்டாறு, முள்ளிப் பொத்தானைக் குடியேற்ற வாசிகள் செல்வது வழக்கம்.

நேற்று முன்தினம் விறகு பொறுக்கச் சென்ற சில குடியேற்றவாசிகளை அங்கு முகாமிட்டுள்ள கடற்படை வீரர்கள் அடித்துத் துன்புறுத்தியதுடன் 24 மணித்தியாலங்களுக்கு மேலாக கடற்படை முகாமினுள் தடுத்து வைக்கப்பட்டதாகவும், பாதிக்கப்பட்ட குடியேற்ற வாசிகள் சிலர் திருமலை அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர்

அண்மைக் காலமாகக் குடியேற்றவாசிகள் இப்பகுதியில் தாக்கப்பட்டு வருவதாகவும் இதனைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கைகள் எடுக்கும்படியும் பொலீஸ் அதிபர், கடற்படை அதிகாரி ஆகியோர்களுக்கும் முறையிடப்பட்டுள்ளது. (287)

## தீராத பெரும் பிரச்சினை

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினை பெரும் பிரச்சினையாக வளர்ந்து கொண்டே போகின்றது. தேசிய அரசாங்கம் கடந்த ஐந்து வருடங்களாக, இதோ வேலை, அதோ வேலை என்கின்றதேயன்றி உருப்படியான எதையும் காண முடியவில்லை. பிரச்சினையோ தேசிய அரசாங்கத்திற்கு முன்னைய அரசாங்கங்களில் இருந்தே வளர்ந்து வந்துள்ளது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாததா? இதோ அதோ என்று தமுக்கடிப் பதில் காலம் போக்காது. இப் பட்டதாரிகளைப் பயன்படுத்தக் கூடிய இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று விவசாயம், மற்றது சுகாதாரம் இந்த இரண்டு பகுதிக்கும் ஆட்கள் தேவை என்பது பகிரங்கம். அவைகளில் இப் பட்டதாரிகளைப் புகுத்துவதற்கு உடனடியாகக் கவனம் செலுத்துமாறு அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

தந்தி

## ராதா

இருபது பக்கங்கள். பற்பல புதிய அம்சங்கள். உங்கள் பிரதிகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

விலையில் மாற்றமில்லை.

சர்க்குலேஷன் மனேஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேன் நிலவில் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை

# ஜாதகம் பார்த்த பின் திருமணம் செய்தோம்

கம்பஹா, ஜூலை. 24

"எதிர் மனுதாருடன் தேன் நிலவைக் கழித்து விட்டு வீட்டுக்கு வந்தேன். அப்போது என் அம்மா ஒன்றைப்பற்றி என்னிடம் விசாரித்தார். எதிர்பார்த்தது கிடைக்கவில்லை என்றேன்."

கம்பஹா நீதவான் திரு. பாலிந்த ரணசிங்க முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட விவாக ரத்து வழக்கொன்றில் வழக்கறிஞரின் குறுக்குக் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் மனுதாரர் மேற்கண்டவாறு சொன்னார்.

இவ்வழக்கில் விஜயரட்ண என்பவர் தனது மனைவியான பேலவதி என்பவரிடமிருந்து விவாகரத்துக் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

எதிர் மனுதார் தரப்பு வழக்கறிஞர்: கல்யாணத்துக்கு முன்னர் ஜாதகம் பார்க்கப் பட்டதா?

மனுதார்: ஆம்.

வழக்கறிஞர்: கல்யாணத்துக்கு பிறகும் ஜாதகம் கணிக்கப்பட்டதா.

மனுதார்: ஆம்.

வழக்கறிஞர்: உங்கள் இருவருக்கும் இடையில் ஒற்றுமையில்லாத படியால்தான் ஜாதகம் கணிக்கப் பட்டதா?

மனுதார்: ஆம்.

வழக்கறிஞர்: கடைசி விசாரணை தினத்தன்று நீர் பதிவுத் தபாலில் எதிர் மனுதாருக்கு கடிதம் அனுப்பினீரா?

மனுதார்: ஆம்.

வழக்கறிஞர்: நீர் விரும்பாததற்கு காரணம் என்ன?

மனுதார்: எனது சாட்சியங்கள் பத்திரிகைகளில் பிரபல்யம் செய்யப்பட்டுவிட்டதனல் நான் விரும்பவில்லை:

வழக்கறிஞர்: எந்தப் பத்திரிகையில்

மனுதாரர்: சவஸப் பத்திரிகையில். அவளை திரும்ப ஏற்றுக் கொள்ளமுடியாது. சம்பவம் பத்திரிகையில் வெளிவந்து விட்டது.

வழக்கறிஞர்: நீங்கள் இருவரும் ஒன்ருகக் குடித்தனம் நடத்திய போதும்கூட கடிதங்கள் எழுதிக் கொண்டீர்கள். ஏன் அப்படி எழுதிக் கொண்டீர்கள்?


மனுதாரர்: அவள் என்னுடன் பேச மாட்டாள்.

வழக்கறிஞர். நீர்கொழும்பு வாடி வீட்டில் தேன் நிலவைப் பருகியதைப் பற்றி அவள் உமக்கு கடிதம் எழுதினுள்?

வழக்கறிஞர்: தேன் நிலவைப் பருகி முடிந்ததும் வீட்டுக்கு வந்ததும் அதைப் பற்றி ஏன் மற்றவர்களிடம் நீர் அறிவிக்கவில்லை.

மனுதார்: நாங்கள் இருவம் அந்த இரகசியத்தை பாதுகாக்க வேண்டுமென்பதற்காக சொல்லவில்லை.

மேலதிக விசாரணை வேருெரு தினத்துக்கு தவணை போடப்பட்டது. (19)



"அப்பல்லோ–11" விண்வெளிக் கப்பல் இன்று பசுபிக்கில் குதித்த பின்னர் இப்படிக் காட்சி அளிக்கும்.

## கிணறு தோண்ட நிதி ஒதுக்கீடு

பதுளை, ஜூலை 24

பதுளை மாவட்ட குடியேற்ற திட்டங்கட்காக கிணறுகள் தோண்டவும், நீர் நிலைகள் அமைக்கவும் எதிர்வரும் ஆண்டில் ரூபா 75 ஆயிரம் நிதி ஒதுக்க நில அபிவிருத்தி இலாகா முடிவு செய்துள்ளது.

அத்துடன் நிரந்தர கூரைகளை குடியேற்றவாசிகளின் வீடுகட்கு போட ரூபா 50 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (278)

## எருமைகள் பாதுகாப்பு நிலையங்கள்

கலாவெவ, ஜூலை 24

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதான வீதிகளில் எருமைகள் பாதுகாப்பு நிலையங்கள் நிறுவ அனுராதபுரம் அரசாங்க அதிபர் திரு. ஜவன் சமரவிக்ரமா தீர்மானித்துள்ளார். (24)

## அமைச்சரின் செய்தியுடன் மாணவர்கள் மரதன் ஓட்டம்

திருகோணமலை, ஜூலை 24

கல்வி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு தேசிய மரதன் ஓட்டம் ஒன்று ஜூலை 20-ம் திகதி ஆரம்பமாகின்றது.

ஆறு பாதைகளில் இருந்து மாணவர்கள் மரதன் ஓட்டமாக கல்விக் கொடியையும் கல்வி அமைச்சரின் செய்தியையும் எடுத்துக் கொண்டு செல்வர்.

திருமலை மரதன் ஓட்ட வீரர்கள் ஹபரணையில் வைத்து அம்பாறை மாவட்ட மரதன் ஓட்ட வீரர்களிடம் இதனைக் கையளிப்பர். முடிவில் மரதன் ஓட்டம் கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் ஆகஸ்ட் 5-ல் வந்து முடிவடையும். (287)

## வீட்டுச் சுவர் விழுந்ததால் சிறுவன் பலி; மூவர் காயம்

உப்புவெளி, ஜூலை 24

வீட்டுச் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததினல் குழந்தை ஒன்று கொல்லப்பட்டது. மூவர் காயமடைந்தனர். இந்தப் பரிதாப சம்பவம் உப்புவெளியில் உள்ள செல்வநாயக புரத்தில் இடம் பெற்றது.

சிறுவர்கள் சுவருக்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. சம்பவத்தின் போது கே. தர்மலிங்கம் என்றஆறு வயதுச் சிறுவன் கொல்லப்பட்டான்.

காயமடைந்த மற்றைய மூன்று சிறுவர்களும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (5)

## புதிய தலைவர் சேனைக்கு

சன்பெரி, ஜூலை 24

உலக இரட்சண்ய சேனையின் புதிய தலைவராக சுவீடனைச் சேர்ந்த ஜெனரல் பிக்பேர்க் (65) தெரிவு செய்யப்பட்டுள்ளார். (5)

## பலாத்கார முயற்சி?

மிகிந்தலை, ஜூலை 24

தனது வீட்டுக்கு அருகாமையில் உள்ள ஒருவர், தான் வீட்டில் இல்லாத சமயம், மனைவி தனியாக இருக்கையில் அவளை பலாத்காரம் செய்து கற்பழிக்க முயன்றார் என மிகிந்தலையிலிருந்து ஒருவர் அனுராதபுரம் பொலீஸாரிடம் புகார் செய்துள்ளார். (24)

## ராணுவ வீரர் மீது கொலை முயற்சிக் குற்றச்சாட்டு

பனுகொட ராணுவ முகாமையைச் சேர்ந்த கோப்பொரல் தேவேந்திரன் எனபவரைக் கொலை செய்ய முயன்றதாக அதே ராணுவ முகாமைச் சேர்ந்த பி. இரத்ன சபாபதி என்பவர் மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு தெற்கு மேலதிக நீதவான் திரு. டி. எஸ். டி. சேனநாயக்கா முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

மருதானை தபால் இலாகாவைச் சேர்ந்த தொழிலாளியான எம். ஏப்பிரஹாம் சிங்ஹோ என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"எதிரியைப் போன்ற ஒருவரும் மற்றும் ஐந்து பேரும் எனது வீட்டில் வந்து மது அருந்தினுர்கள். பாய் ஒன்றின் கீழ் இருந்து கத்தி ஒன்றை எடுத்து பப்பாப் பழம் ஒன்றும் வெட்டிக் கொடுத்தேன். பின்னர் பைலாப் பாட்டைப் பாடிக் கொண்டு அவர்கள் வெளியேறினுர்கள். பப்பாப் பழம் வெட்டிய கத்தியைக் காணவில்லை என்பது அடுத்த நாள் தெரிய வந்தது. எனது வீட்டுக்கு வந்தவர்களில் ஒருவர் காயமடைந்ததாக பின்னர் அறிந்தேன் என்ருர்.

மேல் விசாரணை ஆகஸ்ட் 6-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (5)

## கணவனுக்கும் மனைவிக்கும் காயம் விளைவித்தாராம்

சிறியலதா பொன்சேகா என்ற பெண்ணைக் கத்தியால் வெட்டிக் காயம் உண்டு பண்ணியதாகவும் அவரின் கணவரான கில்பேர்ட் தேவராஜா என்பவருக்கு அதே கத்தியால் காயம் விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டி கல்கிஸையைச் சேர்ந்த பி. எம். பின்டோ ஜெயவர்த்தன என்பவருக்கு எதிரான வழக்கு கொழும்பு தெற்கு நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்பவதினம் எதிரியின் வீட்டுக்கு முறைப்பாட்டுக்காரர் வந்ததாகவும், முறைப்பாட்டுக்காரரின் குழந்தை பற்றி எதிரி முறையிட்ட போது இருவருக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டதாகவும் எதிரியின் வழக்கறிஞர் சொன்னர்.

சம்பவம் எதிரியின் வீட்டில் நடைபெறவில்லை என்றும் அது வீதியில் நடைபெற்றது என்றும் புரஷிகியூசன் தரப்பில் கூறப்பட்டது.

வைத்திய சாட்சியங்கள் கிடைக்காதபடியால் நீதவான் வழக்கை அக்டோபர் 11-ம் திகதி வரை ஒத்திவைத்தார். (5)

## நிந்தவூர் தபால்பெட்டி

ஒலுவில், ஜூலை 24

நிந்தவூர் தொகுதியைச் சேர்ந்த ஒலுவில் கிராமத்தின் மத்தியில் அமைந்திருக்கும் தபால் பெட்டி பல வருடங்களாக பொதுமக்களின் உபயோகத்திற்கு லாயக்கற்றதாகக் காட்சியளிக்கின்றது. (217)

## கார் விபத்தை தொடர்ந்து கென்னடியின் லைசென்ஸ் ரத்து

பொஸ்டன், ஜூலை 24

செனட்டர் எட்வார்ட் கென்னடியின் கார் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டுள்ளது. பொஸ்டன் மோட்டார் வாகன ரிஜிஸ்ட்டிரார் திரு. ரிச்சார்ட் மக்லாப்பின் இத்தகவலை அறிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை செனட்டர் கென்னடி செலுத்திச் சென்ற கார் விபத்துக்குள்ளாகி ஏரி ஒன்றில் பாய்ந்ததும் செனட்டர் கென்னடியுடன் பிரயாணம் செய்து கொண்டிருந்த அழகிய இளம் பெண் ஒருத்தி கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

மேரி கோஷேன் (25) என்ற இந்தப் பெண்ணின் மரண விசாரணை முடிவடையும்வரை லைசென்ஸ் மீண்டும் வழங்கப்பட மாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் திங்கட்கிழமை செனட்டர் கென்னடி நீதிமன்றத்தில் ஆஜராவார். விபத்து நடைபெற்ற இடத்தில் இருந்து சென்றதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்படும். (5)

## "தந்தி"

(8 பக்கங்கள்)

27. 7. 69 ஞாயிற்றுக் கிழமை (போயா தினத்திற்கு முன்தினம்) 8 பக்கங்களுடன் தந்தி வெளியிடப்படும்.

விலையில் மாற்றமில்லை.

சர்க்குலேசன் மனேஜர்,

சுயாதீன பத்திரிகா சமாஜம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்வீரர் டெலிவிஷனில் மீண்டும் தோன்றினர்

# இரைச்சலுக்கு காரணம் வீரர் அனுபவித்த இசை!

### கலம் இறங்கும் இடத்தில் கால நிலை சீர்கேடு

ஹவுஸ்டன், ஜூலை 24

"அப்பலோ-11" விண்வெளி கப்பலிலேற்பட்ட பயங்கரப் பேரிரைச்சலின் மர்மம் துலங்கியுள்ளது. "சந்திரனிலிருந்து இசை" என்ற பாட்டை நீல் ஆம்ஸ்ட்ராங் தனது ஒலிப்பதிவுக் கருவியில் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்த சப்தமே அது என்று ஹவுஸ்டனில் உள்ள கட்டுப்பாட்டு அதிகாரிகள் அறிவித்து உள்ளனர்.

யுத்த பேரிகை கொட்டும் ஆயிரக் கணக்கான செவ்விந்தியர்களின் சிரிப்பு ஒலியைப் போன்ற பேயிரைச்சல் ஏற்பட்டதற்கு காரணம் என்ன என்று விண்வெளி வீரர்களிடம் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் நேற்று மாலை கேட்டனர். "நான் இசையை ரசிக்க விரும்பியதாகவும், ஆனால் குறிப்பிட்ட பாட்டு சரியான முறையில் இல்லாமல் ஒழுங்கீனமான குரல் எழுப்பியதே அந்த பேரிரைச்சலுக்குக் காரணம்" என்றும் ஆம்ஸ்ட்ராங் பதில் அளித்தார்.

#### காலநிலை

பசிபிக்கில் அப்பலோ வீரர்கள் வந்திறங்கும் பகுதியில் காலநிலை சீர்கேடாக உள்ளது. நேற்று இங்கு பெரும் மழை பிடித்துக் கொண்டது. வானத்தை முகிற் கூட்டங்கள் மறைத்திருந்தன. 1.20 மீட்டர் அலையும் லேசான காற்றும் இருந்தது.

#### டெலிவிஷனில்

அப்பலோ வீரர்கள் இன்று கடைசித் தடவையாக டெலிவிஷனில் தோன்றினார்கள். நீல் ஆம்ஸ்ட்ராங் பேசிய போது குரல் தழதழத்தது. கண்களில் கண்ணீர் மல்கியது. தங்கள் எட்டு நாள் பயணத்தில் உதவிய ஒவ்வொருவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார். "அப்பலோ—11" விண்கலத்தில் இருந்து உங்களுக்கு இரவு வணக்கம் கூறுகிறேன். கடவுள் உங்களைக் காப்பாற்றுவாராக" என்று கூறி நீல் ஆம்ஸ்ட்ராங் டெலிவிஷன் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டார்.

#### அப்பலோ—12

இதற்கிடையில் "அப்பலோ-12" விண் வீரர்களான சார்ள்ஸ் கொன்ருட், அலபீன் ஆகிய இருவரும் தங்கள் வானரதத்தை சந்திரனின் கிழக்குப் பகுதியில் ஒரு குழிக் கருகில் இறக்குவார்கள் என வான வெளி வட்டாரங்கள் அறிவித்தன.

"அப்பலோ—11" விண் வீரர்களின் அனுபவத்தின் அடிப்படையில் இந்த இறக்குமிடம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

"அப்பலோ—12" வீரர்களை இறக்குவதற்கு முன்பு வேறு இடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

கொன்ருட், பீன் ஆகிய இருவரும் சந்திரனில் இறங்கும் போது, பிரதான கப்பலில் ரிச்சார்ட் கோஸ்டன் சந்திரனை வலம் வந்து கொண்டிருப்பார்.

நவம்பர் 11—ம் திகதி முதல் ஐந்து நாட்களுக்கு பூமியும் சந்திரனும் இருக்கும் நிலை மிகச் சிறப்பானதாக இருக்கும்.

சந்திரனில் 3001 அடி தூரத்தில் அப்பலோ—12 வீரர்கள் பரிசோதனை நடத்துவார்கள். அப்பலோ—11 வீரர்கள் வானரதம் இறங்கிய இடத்திலிருந்து 50 அடி தூரத்திலேயே தங்கள் பரிசோதனைகளை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. (5)

### விசேஷ உடை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பதற்காக கட்டளைக் கலத்தின்மீது மருந்து தெளிக்கப்பட்டது.

கட்டளைக் கலத்துக்கு மேலாக ஹெலிகாப்டர் விமானங்கள் பறந்து செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் "ஹோர்னட்" கப்பலின் மேல் தளத்துக்கு அமெரிக்க தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிலைய பிரதம அதிகாரியுடன் வந்த அமெரிக்க ஜனாதிபதி திரு. ரிச்சார்ட் நிக்ஸன் இதை எல்லாம் அவதானித்துக் கொண்டிருந்தார்.

விண்வெளி வீரர்கள் வெளியில் எடுக்கப்படும் முன்னர், அவர்களுக்கு விசேஷ உடைகள் கட்டளைக் கலத்தினுள் போடப்பட்டன. பூமியில் உள்ளவர்களை புதிய கிருமிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காகவே இந்த உடைகள் கொடுக்கப்பட்டன.

எல்லா பாதுகாப்பு நடவடிக்கைகளும் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் ஹெலிகொப்டர் விமானங்கள் மூலம் விண்வெளி வீரர்கள் வெளியில் தூக்கி எடுக்கப்பட்டு கப்பலுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

### ஜூரருக்கு அபராதம்

காலி, ஜூலை 24

வழக்கு விசாரணை ஒன்றின் போது நீதிமன்றத்துக்கு வரத் தவறிய ஜி. ஏ. சுவாமிநாதன் என்ற ஜூரருக்கு காலி அசைஸ் நீதியரசர் திரு. ஏ. எல். எஸ். சிறிமானே நூறு ரூபா அபராதம் விதித்தார்.

அபராதம் செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு வாரம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டது. (5)

### அமெரிக்க விண் கலங்கள் செவ்வாய்க்குவிரைகின்றன

ஹவுஸ்டன், ஜூலை 24

அமெரிக்கா இன்று இரு விண் கலங்களைச் செவ்வாய்க் கிரகத்தை நோக்கி அனுப்பியது.

மெரீனர்-6, மெரீனர்-7 ஆகிய இந்த இரு விண்கலங்களும் இந்த மாதக் கடைசியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் செவ்வாய் மண்டலத்தின் ஈராயிரம் மைலுக்குள் நெருங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3½ கோடி மைல் தூரத்திலிருந்து கலிபோர்னியாவிலுள்ள பஸடேரு ஆராய்ச்சி நிலையத்திற்கு இந்த செவ்வாய்க் கலங்கள் டெலிவிஷன் படங்களை அனுப்பி வைக்க இருக்கின்றன.

பூமியைப் போலவே செவ்வாயிலும் உயிரினங்கள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

செவ்வாயில் உயிரினங்கள் வாழ்வது சாத்தியம் என்பதை இந்த டெலிவிஷன் படங்கள் ஊர்ஜிதம் செய்யுமானால், மனிதனின் வான வெளிப் பிரயாணம் இனி செவ்வாயை நோக்கியிருக்கும்.

உதவி ஜனாதிபதி ஸ்பைரோ அக்னூ தலைமையில் விசேஷ விண்வெளிப் பயண நிபுணர்கள் குழு வெள்ளைமாளிகையில் இயங்கி வருகிறது. கி. பி. 2000 ஆண்டுக்கு முன்பாக மனிதனை செவ்வாயில் இறக்க அமெரிக்கா உத்தேசித்திருப்பதாய் திரு. அக்னூ சமீபத்தில் அறிவித்திருந்தார்.

நேற்று இதே கருத்தை ஜனாதிபதி நிக்ஸனும் வெளியிட்டிருந்தார். உயிரினங்கள் வாழும் சில கிரகங்களுக்கு இன்னும் 30 வருடங்களுக்குள் மனிதன் சென்றுவிடுவான் என நிக்ஸன் நேற்று கூறினார். (5)

### அப்பம்விற்றுவந்தசிறுவன் மாடியால் விழுந்தான்?

கண்டி, ஜூலை 24

நோயாளர்களுக்கு அப்பம் விற்றுக் கொண்டிருந்த எஸ். ஏ. உபாலிதே என்ற எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் கண்டி ஆஸ்பத்திரியின் நாலாவது மாடியில் இருந்து விழுந்து மரணமடைந்ததாகக், கூறப்படும் சம்பவம் பற்றி பொலீசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

கண்டி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. சி. விக்கிரமரத்ன முன்னிலையில் காலஞ் சென்ற சிறுவனின் சகோதரனை எஸ். ஏ. வீரசிங்கா என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"காலஞ் சென்றவரும் நானும் ஆஸ்பத்திரியின் நாலாம் மாடி நோயாளர்களுக்கு அப்பம் விற்று வருவது வழக்கம். ஆஸ்பத்திரி தாதி ஒருத்தி எங்களைக் கலைத்த போது நான் ஒருபுறம் ஓடினேன். காலஞ் சென்றவர் திறந்து கிடந்த கதவுப் பக்கம் ஓடினார்" என்றார்.

காலஞ் சென்றவரின் தந்தையான எஸ். ஏ. பிரேமதாசா, நான்காம் மாடிக்குப் பொறுப்பான தாதி திருமதி எல். எம். தர்மரத்ன ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

ஆகஸ்ட் 18-ம் தேதி இது சம்பந்தமாக நீதவான் விசாரணை நடைபெற உள்ளது. (5)

### சிறுவனைமோதியபஸ்வண்டி தென்னையுடன்முட்டிநின்றது

இ. போ. சபை பஸ் ஒன்று வீதியில் இருந்து விலகி ஏழு வயதுச் சிறுவன் ஒருவனை மோதிய பின்னர் தென்னை மரம் ஒன்றுடன் முட்டி நின்றது.

இந்தப் பயங்கர சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பலாந்தோட்டையில் உள்ள டெஹிகஹாலந்தாவில் இடம் பெற்றது.

விபத்து இடம்பெற்ற பஸ் திஸ்ஸமஹாரமயை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

டபிள்யூ. ஏ. டனிமஹத்யா என்ற ஏழு வயதுச் சிறுவன் விபத்தில் கொல்லப்பட்டான். அம்பலாந்தோட்டைப் பொலீஸார் பஸ் சாரதியை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். (5)


உங்கள் வீட்டில் ஒரு வைத்தியர் இருப்பதென்றல் எவ்வளவு நல்லது!



சித்தாலேப்ப

போத்தல் ஒன்றை வாங்கி வைத்திருப்பதனல் அந்தக் கவலை தீர்ந்து விடுகிறது.

வீட்டில் எவருக்காயினும் ஏற்படும் எந்த ரோகத்திற்கும்

ஒரு முறை பாவித்துப் பாருங்கள்.

ஒரு போத்தலின் விலை ரூ- 2-50

தபால் செலவு 50 சதம்-

பேர்ஸி டிரேடிங் கொம்பனி

185, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு—11-


இப்பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு-12 (இலங்கை). வெளியிட்ட திகதி 25 ஜூலை 1969.
Thanthi, 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org